# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්ව නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

24/2, 28th Lane, Off Flower Road, Colombo 7.
**Tel: 11 4062180-190, 011 2565304, Fax: 011 4714460, 0114503001**.
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cmev.org

## ஜனாபதித் தேர்தல் 2015

### தபால் மூல வாக்களிப்பு தொடர்பான ஊடக அறிக்கை இல.02

**டிசம்பர் 23, 2014 கொழும்பு, இலங்கை :** தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி) இலங்கை முழுவதுமாக தபால் மூல வாக்களிப்பின் முதலாம் நாளைக் கண்காணித்தது. முதலாம் நாளின் இறுதியில் 20 பாரிய சம்பவங்கள் மற்றும் 27 சிறிய சம்பவங்களுடன் மொத்தம் 47 சம்பவங்களை அது பதிவு செய்தது. பாரிய சம்பவங்கள் தாக்குதல், அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களைப் பிரயோகித்தல், அரச வளங்களின் துஷ்பிரயோகம், தேர்தல் அதிகாரிகள் தொடர்பான சம்பவங்கள் மற்றும் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையிலான பிரசன்னம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. சிறிய சம்பவங்கள் அனைத்தும் தேர்தல் குற்றங்கள் தொடர்பானவையாகும்.

**விண்ணப்பங்களின் செயன்முறைப்படுத்தல்**

டிசம்பர் 23, 24, 26 மற்றும் 30 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்புக்காக மொத்தம் 541,831 வாக்காளர்கள் தகுதியானவர்களாக உள்ளனர் என்பதை தே.வ.க.நி கவனத்தில் கொள்கிறது. தபால் மூல வாக்களிப்பின் முதலாம் நாளன்று பல சம்பவங்களை தே.வ.க.நி அவதானித்தது, தபால் மூல வாக்காளர்களைப் பதிவு செய்யும் முறை தொடர்பான கரிசனைகளை எழுப்பியதுடன், அது தேர்தல்களின் நேர்மைத்தன்மையை பாதிக்க முடியும். முதலில், தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் தொடர்பான கரிசனைகளை தே.வ.க.நி எழுப்புகிறது. தற்போதைய நடைமுறைகளின் படி, தனது திணைக்களத்திலுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட தலைவரே அனுப்புகிறார். இந்த குறிப்பிட்ட தனிப் பட்டவரிடமிருந்தான ஏதேனும் தாமதங்கள் மற்றும்/அல்லது முரண்பாடுகள் கணிசமான ஒரு தொகையினர் வாக்களிப்பதற்கு இயலாதிருப்பதற்கு இட்டுச் செல்ல முடியும். 85,000 இற்கு அண்மித்த ஒரு பெருந் தொகையான நிராகரிக்கப்பட்ட தபால் மூல வாக்குகளுக்கு விண்ணப்பங்களிலான தாமதங்களே பங்களித்தன என தே.வ.க.நி இற்கு அறியத்தரப்பட்டது. தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட சம்பவமான புத்தள கல்வி வலய அலுவலகத்தில் 140 விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்பட்டு அதில் 30 விண்ணப்பங்கள் தாமதங்களைக் குறிப்பிட்டு நிராகரிக்கப்பட்டன. ஒரு தனிப்பட்டவர் மேல் பெரிதும் தங்கியுள்ளதும் மற்றும் ஒரு கணிசமான பிரசைகளின் எண்ணிக்கையின் வாக்களித்தலின் இயலாமைக்கு இட்டுச் செல்ல முடியுமான தற்போதைய நடைமுறை குறித்து தே.வ.க.நி கரிசனை கொள்கிறதுடன் அதன் மீது ஒரு மீளாய்விற்கும் கோருகிறது.

தற்போதைய நடைமுறையில் பல வாக்குகள் கணக்கு காட்டப்படாமை குறித்தும் தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது. குருநாகல் மாவட்டத்தின், மஹாவ டிப்போவில் 56 விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்பட்டு அதில் 39 பெற்றுக் கொள்ளப்பட்டும் 4 நிராகரிக்கவும் பட்டன. 13 வாக்குகளுக்கு கணக்கு காட்டப்படவில்லை. அதேபோன்று, அநுராதபுர மாவட்டத்தின், மிகிந்தல பிரதேச சபையில், 10 விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்பட்டு, 1 கிடைக்கப் பெற்றும் மற்றும் 1 நிராகரிக்கவும் பட்டது. 8 வாக்குகளுக்கு கணக்கு காட்டப்பவில்லை. இந்தப் பிரச்சினைகளை தே.வ.க.நி சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அதிகாரிகளிடம் எழுப்பிய போது, காணாமற் போன வாக்குகளுக்கான கணக்கின் அடிப்படையில் ஒரு திருப்தியான பதிலை அவர்களால் அளிக்க முடியாதிருந்ததுடன் இந்த விடயம் தொடர்பில் உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளரை தே.வ.க.நி வலியுறுத்தியது.

**வாக்களித்தலைப் பாதிக்கும் காரணிகள்**

இந்த ஊடக அறிக்கையை வெளியிடும் தருணத்தில் அறிவிக்கப்பட்ட சம்பவங்களின் அடிப்படையில், சில தபால் மூல வாக்களிப்பு மையங்களில் இராணுவத்தினால் வகிக்கப்பட்ட வகிபாகம் குறித்து தே.வ.க.நி கரிசனை கொண்டுள்ளது. கீழே அறிவிக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் ஊடக அறிக்கை 1 இல் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சுட்டிக் காட்டப்பட்ட சம்பவங்கள் என்பன வாக்களித்தலின் நேர்மைத்தன்மையை பாதிக்க முடியும்.

இலங்கையின் பல பாகங்களில் நிலவும் மோசமான காலநிலை காரணமாக இன்று குறைந்த வாக்களர்கள் வருகை குறித்தும் தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது. கிழக்கு மாகாணம் மற்றும் மன்னார் மாவட்டத்தில் இருந்தான அறிக்கைகள் கடும் மழை மற்றும் வெள்ளம் என்பன வாக்காளர் வருகையைப் பாதிக்கின்றதாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மோசமான காலநிலை எஞ்சியுள்ள தபால் மூல வாக்களிப்புத் தினங்களுக்கும் தொடர்ந்து தேர்தல் தினத்தையும் பாதிக்கும் சாத்தியமுடையதாயின், வாக்காளர்கள் தங்களது வாக்களிக்கும் உரிமையை இழந்துவிடாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளரை, தே.வ.க.நி வலியுறுத்துகிறது.

மேலே எழுப்பப்பட்ட பரந்தபட்ட அடிப்படையிலான பிரச்சினைகளுக்கு மேலதிகமாக, முதலாம் நாள் தபால் மூல வாக்களிப்பு தினத்தில் நடைபெற்ற பல சம்பவங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

**டிசம்பர் 23, 2014, குருநாகல் தெற்கு இலங்கைப் ோக்குவரத்துச் சபை பஸ் டிப்போ, குருநாகல் மாவட்டம்**

'நீலப் படையணி' என்ற சுலோகம் அச்சடிக்கப்பட்ட டி - ஷேர்ட்டுகள் அணிந்த ஒரு குழுவினர் வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியேயுள்ள வளாகத்தில் காலை சுமார் 10.45 அளவில் நடமாடியமை அவதானிக்கப்பட்டதாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது.

**டிசம்பர் 23. 2014, இலங்கை மின்சார சபை தலைமை அலுவலகம் - சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை, கொழும்பு 02, கொழும்பு மாவட்டம்**

தே.வ.க.நி இன் கண்காணிப்பாளர், வாயிலில் கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரால் வாக்களிப்பு நிலையத்திற்கு நுழைவதற்கு அனுமதிக்கப்படவில்லை. கட்டிடத்தில் வாக்களிப்பு நடைபெறவில்லை என கண்காணிப்பாளருக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் அறிவித்தார். இலங்கை மின்சார சபையிலுள்ள அதிகாரிகளைத் தே.வ.க.நி தொடர்பு கொண்டதன் பேரில், கண்காணிப்பாளர் உள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டார்.

**டிசம்பர் 23, 2014, கங்காவத்தை கோரளைப் பிரதேச செயலகம் - கண்டி, கண்டி மாவட்டம்**

வாக்களிப்பு நிலையத்திற்கு அருகாமையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஒரு பெரிய உருவப்பட பதாகை காட்சிப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததாக தே.வ.க.நி இன் ஒரு கண்காணிப்பாளர் முறைப்பாடொன்றை மேற்கொண்டார். இந்தக் கட்டிடம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமானதுடன் பிரதேச செயலக அலுவலகத்தில் வாக்களிப்பு நிலையத்திற்கு நேரடியாக தெரியும் வகையில் வைக்கப்பட்டிருந்தது.

**டிசம்பர் 23, 2014, இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போ, வவுனியா**

ஒரு வாக்களிப்பு நிலையமாக உள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக் கட்டிடத்தினுள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததாக தே.வ.க.நி கண்காணிப்பாளர் அறிவித்தார்.

**டிசம்பர் 23, 2014, இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போ, நாவலப்பிட்டி, கண்டி மாவட்டம்**

மேற்குறிப்பிட்ட இடத்தில், வாக்காளர்கள் தங்கள் வாக்குச் சீட்டை அடையாளம் இட்டு, அதனை பெட்டியில் இடுவதற்கு முன் சிரேஷ்ட வாக்களிப்பு அதிகாரிக்கு காண்பிப்பதற்கு செய்யப்பட்டதாக, தே.வ.க.நி இற்கு அறியத்தரப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக கண்டி பிரதித் தேர்தல்கள் ஆணையாளரை தே.வ.க.நி தொடர்பு கொண்டது. பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் குற்றச்சாட்டை மறுத்ததுடன் தனது பிரதிநிதி குறித்த வாக்களிப்பு நிலையத்தில் பிரசன்னமாக இருந்ததாகவும் அப்படியொரு சம்பவம் நடைபெறவில்லையெனவும் குறிப்பிட்டார்.

**டிசம்பர் 23, 2014, இலங்கை போக்குவரத்து சபை கதிர்காமம் டிப்போ, மொனராகலை மாவட்டம்**

மேற்குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையத்தில், தேர்தல் முகவர்கள் (ஐ.தே.க மற்றும் ஐ.ம.சு.கூ ஆகிய இரண்டும்) தங்களது தேசிய அடையள அட்டைக்குப் பதிலாக இ.போ.ச ஆல் அளிக்கப்பட்ட அடையாளப்படுத்தல் ஆவணத்துடன் வாக்களிப்பதற்கு வந்த வாக்காளர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டதாக தே.வ.க.நி இன் நடமாடும் கண்காணிப்பாளர் ஒருவர் முறையிட்டார். ஐ.தே.ச தேர்தல் முகவர், வாக்காளர்கள் இ.போ.ச ஆல் வழங்கப்பட்ட அடையாள ஆவணத்தை உபயோகிக்க முடியுமெனக் கூறிய வேளையில், தேசிய அடையாள அட்டை கட்டாயமானது என ஐ.ம.சு.கூ வாதிட்டது. இரண்டு பொலிஸ் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு பிரச்சினை தீர்க்கப்பட்டது.

**டிசம்பர் 23, 2014, நிட்டம்புவை பிரதேச செயலகம், கம்பஹா மாவட்டம்**

பிரதி அமைச்சர் சரண குணவர்த்தன வேறு இரண்டு ஆட்களுடன் மேற்குறிப்பிட்ட கட்டிடத்தினுள் நுழைந்து தேர்தல் அதிகாரியிடமிருந்து அளிக்கப்பட்ட தபால் மூல வாக்குகளின் எண்ணிக்கை பற்றி விசாரணைகள் மேற்கொண்டதாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது.

**டிசம்பர் 23, 2014, மாவட்ட வைத்தியசாலை மாவத்தைகம, குருநாகல் மாவட்டம்**

கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் வாக்களித்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, மாவட்ட வைத்தியசாலையின் அதே கட்டிடத்தின் முதலாம் மாடியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் அவரது தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டில் ஆற்றிய உரை, சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

**டிசம்பர் 23, 2014, கம்பளை இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போ**

ஒரு வாக்களிப்பு நிலையமாக செயற்பட்ட மேற்படி இடத்திலுள்ள சுவர்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சுவரொட்டிகள் தேர்தல் ஆணையாளரால் பணிக்கப்பட்டவாறு அகற்றப்படாது இருந்தன.

**டிசம்பர் 23, 2014, கிரிலாவல வலய கல்வி அலுவலகம், கம்பஹா மாவட்டம்**

ஒரு வாக்களிப்பு நிலையமான மேற்குறிப்பிட்ட இடத்தில் மகிந்த ராஜபகசவின் ஒரு 15 அடிகள் உயரமான ஒரு விளம்பரப் பதாகை பொருத்தப்பட்டிருந்ததாக தே.வ.க.நி கண்காணிப்பாளர் ஒருவர் முறையிட்டார்.

**டிசம்பர் 23, 2014, சிவில் பாதுகாப்பு வலய அலுவலகம், திருகோணமலை, திருகோணமலை மாவட்டம்**

வலய சிவில் பாதுகாப்பு அலுவலகத்தில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தங்கள் வாக்குகளை அளிப்பதற்கான போக்குவரத்துக்கு திருகோணமலை டிப்போவைச் சேர்ந்த இரண்டு பஸ் வண்டிகள் (ஒரு பஸ் வண்டியின் பதிவு இல. NA 3647) உபயோகிப்பட்டதாக தே.வ.க.நி கண்காணிப்பாளர் ஒருவரினால் அறிவிக்கப்பட்டது. இந்த பஸ் வண்டிகளின் பக்கங்களில் மகிந்த ராஜபக்சவின் தேர்தல் பரப்புரைச் சாதனங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. தே.வ.க.நி இன் கண்காணிப்பாளர் இந்த இரண்டு பஸ் வண்டிகள் பற்றி டிப்போவில் விசாரணைகள் மேற்கொண்ட போது, அத்தகைய தேவைகளுக்காக எந்த பஸ் வண்டிகளும் விடுவிக்கப்படவில்லையென அவருக்கு தெரிவிக்கப்பட்டது. குறித்த டிப்போவின் முகாமையாளர் திரு.விஜித்த தர்மசிறி, ஐ.ம.சு.கூ ஐப் பிரதிநிதிப்படுத்துகின்ற ஒரு உள்ளூராட்சி சபை உறுப்பினர் எனவும் எங்களது கண்காணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டது.

**டிசம்பர் 23, 2014, வலயக் கல்வி அலுவலகம் - கெப்பிட்டிக்கொலாவை, அநுராதபுர மாவட்டம்**

கண்காணித்தலுக்காக உள்ளே செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என வாசலில் நின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மாவட்ட தேர்தல் ஆணையாளர் அறிவிக்கும் வரை, இந்த வாக்களிப்பு நிலையத்திற்கு நியமிக்கப்பட்ட தே.வ.க.நி இன் கண்காணிப்பாளர் உள்ளே செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

**டிசம்பர் 23, 2014, வலயக் கல்வி அலுவலகம், அம்பலாங்கொடை, களுத்துறை மாவட்டம்**

வாக்களிப்பு நிலையமாக செயற்பட்ட அம்பலாங்கொடை வலயக் கல்வி அலுவலகத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஒரு பதாகை (1.5 X 2 அடி) பிரத்தியட்சமான வகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது என தே.வ.க.நி இன் நடமாடும் கண்காணிப்பாளர் ஒருவர் அறிவித்தார். இந்தப் பிரச்சினையை தே.வ.க.நி கண்காணிப்பாளர் வலயக் கல்விப், பணிப்பாளர், திருமதி. எஸ்.ஈ. சந்திரவதியுடன் எழுப்பிய போது, அத்தகைய பதாகைகளை அகற்ற வேண்டிய பொறுப்பு பொலிசாருடையது எனவும் இது தொடர்பில் வலயக் கல்வி அலுவலகத்தால் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாதெனவும் கண்காணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

**டிசம்பர் 23, 2014, இலங்கை இராணுவ சிங்கப் படையணியின் 591 ஆவது படையணித் தலைமையலுவகம், அலம்பில் – கிளிநொச்சி மாவட்டம்**

இந்த வாக்களிப்பு நிலையத்தில், ஒவ்வொரு வாக்குச் சீட்டும் அடையாளப்படுத்தப்படுதைத் அரசாங்க அதிகாரிகள் பார்க்கும் வகையில் இருந்ததினால் வாக்களிப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடம், பாதுகாப்பானதாக இல்லையென தே.வ.க.நி இன் நடமாடும் கண்காணிப்பாளர் ஒருவர் தெரிவித்தார். இந்த விடயத்தை தே.வ.க.நி கண்காணிப்பாளர் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர் மற்றும் தேர்தல்கள் திணைக்களத்திலிருந்தான அதிகாரிகளிடம் எடுத்துரைத்தார்.

தே.வ.க.நி இன் கண்காணிப்பாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளிடமும் ஒரு எழுத்து மூலமான முறைப்பாட்டை மேற்கொண்டார். வாக்காளரின் தெளிவான தோற்றம் தனக்கு தெரிய வேண்டுமென்பதால் ஏற்பாடுகள் இவ்வாறு செய்யப்பட்ட என அத்தாட்சிப்படுத்தும் அதிகாரி விசாரணையின் போது தே.வ.க.நி கண்காணிப்பாளருக்கு அறிவித்தார். நிலைமையைச் சீர்செய்வதற்கு மாற்று ஏற்பாடுகள் பின்னர் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் இதனை மேற்கொள்ளும் வேளையில் இந்த வாக்களிப்பு நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட 391 வாக்குகளில் 154 ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்தன.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி), தேர்தல் வன்முறைகள் தொடர்பான சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் ஒரு சுயாதீன மற்றும் கட்சிச் சார்பற்ற ஸ்தாபனமாக அரசியல் வன்முறைகளுக்கெதிரான ஒரு கூட்டமைப்பு என்பவற்றினால் 1997 இல் உருவாக்கப்பட்டது. தற்போது, தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இன்போர்ம் மனித உரிமைகள் ஆவண நிலையம் என்பவற்றால் உருவகிக்கப்படுகிறது.

தே.வ.க.நி இன் அனைத்து அறிக்கைகள் மற்றும் ஊடக அறிக்கைகள் என்பவற்றை **www.cmev.org** எனும் இணைய தள முகவரியில் பார்வையிடலாம்.



கலாநிதி. பா. சரவணமுத்து
இணை அமைப்பாளர்